# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM I

C 8066969

12/2019/AC/VPM

1. District : மாவட்டம் விழுப்புரம் | PS: காவல்நிலையம் ஊ.ஒ.த | Year: ஆண்டு 2019 | FIR No.: மு.த.அ. எண் | Date: நாள் 16.07.19

2. (i) Act சட்டம்: PC Act 1988 as | Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: Amended by Prevention | Sections பிரிவுகள்: 7
   (iii) Act சட்டம்: of Corruption (Amendment) | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : Act 2018

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 15.07.2019 | Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 18.30 | Time to : நேரம் வரை 23.00
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் | Time : நேரம் 16.07.2019 at 11.00 Hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம் 16.07.2019 at 11.00 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — வடமேற்கு 40 KM
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி சார்பதிவாளர் அலுவலகம் செஞ்சி.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் J. ஜெயகுமார் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation தொழில் காவல் ஆய்வாளர் / (g) Address : முகவரி காவல் ஆய்வாளர், கடலூர் மாவட்டம் மற்றும் விழுப்புரம் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. K.C. சடகோபன், உதவியாளர், சார்பதிவாளர் (பொறுப்பு) செஞ்சி, விழுப்புரம் Dt.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   — NIL —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. இன்று 16.07.2019 ந் தேதி காலை 11.00 மணிக்கு விழுப்புரம் மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியில் இருந்தபோது திரு. J. ஜெயக்குமார், ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கடலூர் என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று கீழ்கண்டவாறு வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் J. ஜெயக்குமார், ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கடலூர் பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விழுப்புரம் ந.க.எ.ண் அ/300/2019, நாள்: 16.07.2019 அய்யா பொருள் திடீர் ஆய்வு - விழுப்புரம் மாவட்டம் - செஞ்சி சார்பதிவாளர் அவலுலகம் - 15.07.2019 அன்று விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுடன் திடீர் ஆய்வு - புகார் கொடுத்தல் - நடவடிக்கை தொடர்பாக :- திடீர் ஆய்வு மகசர் நாள் 15.07.2019 தேதி மதியம் சுமார் 14.00 மணிக்கு விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து எனது அலுவலக அறையில் பணியில் இருந்தபோத எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் விழுப்புரம் மாட்டம் செஞ்சி தாலுக்காவில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் பணியில் இருந்த உதவியாளர், சார்பதிவாளர் (பொறுப்பு) திரு.K.C.சடகோபன் அவர்கள் ஆவணங்களை பதிவு செய்ய வரும் பொது மக்களிடம் லஞ்சமாக பணம் பெறுவதாக கிடைத்த நம்பகமான தகவலை பெற்று உடனடியாக புறப்பட்டு விழுப்புரம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு (Contd..)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Deputy Superintendent of Police,
Vigilance and Anti-Corruption,
Viluppuram.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ..............................
Rank: நிலை ....................No. எண் ..........

அலுவலகத்திற்கு சென்று அங்கு பணியிலிருந்த காவல் துணை கண்காணிப்பாளர் திரு. ந.தேவநாதன் அவர்களிடம் மேற்படி அலுவலகத்தை திடீர் ஆய்வு செய்வது சம்பந்தமாக கலந்து ஆலோசனை செய்து பின்னர் நான், விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளர் திரு. ந.தேவநாதன் மற்றும் குழுவினருடன் சுமார் 18.30 மணியளவில் செஞ்சி சார்பதிவாளர் அலுவலகத்தினுள் சென்று அங்கிருந்தவர்களிடம் எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு அவர்களிடம் திடீராய்வு செய்தபோது அலுவலகத்தினுள் பின்னர் பெயர் தெரிந்த 1.திரு.K.C.சடகோபன், உதவியாளர், சார்பதிவாளர்(பொறுப்பு) அவர்கள் வடக்குப் பார்த்த அவரது இருக்கையில் அமர்ந்திருந்தார். அதன் எதிர்புறத்தில் கிழக்கு நோக்கி 2.திரு.க.சி.சண்முகம், இளநிலை உதவியாளர் என்பவர் அமர்ந்திருந்தார். சார்பதிவாளர் அருகில் அலுவலக உதவியாளர்கள் 3.திரு.P.பாரதிதாசன் மற்றும் 4.S.முனுசாமி ஆகியோர்கள் பத்திரப்பதிவு செய்யுமிடத்தில் நின்று கொண்டிருந்தனர். பின்பு கணனி அறையில் 5.திருமதி.சாமுண்டீஸ்வரி என்பவரை விசாரிக்க அவர் இங்கு TCS தனியார் நிறுனத்தின் மூலம் டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார்.

பிறகு பத்திரம் பதியும் இடத்தில் நின்று கொண்டிருந்தவர்களை விசாரிக்க 6.திரு.திருமலை, 7.திரு.தயாளன் ஆகியோர்கள் ஆவண எழுத்தர்கள் என்றும் அவர்கள் பத்திர பதிவு சம்மந்தமாக அலுவலகத்திற்கு வந்ததாகவும், அதுபோன்று அவரது அருகில் இருந்தவரை விசாரிக்க அவர் தனது பெயர் 8.திரு.செந்தில்குமார் என்றும் தான் ஜெராக்ஸ் கடை நடத்தி வருவதாகவும், ஆவண எழுத்தர் சண்முகம் பிள்ளை என்பவரிடம் உதவியாளராக இருந்து வருவதாகவும் பத்திர பதிவு சம்மந்தமாக அலுவலகத்திற்கு வந்ததாகவும், அதன் பிறகு மற்றவர்களை விசாரிக்க தனது பெயர் 9.திரு.மணிராஜ் என்றும் தயாளன் என்ற ஆவண எழுத்தரிடம் உதவியாளராக இருப்பதாகவும், அதுபோன்று 10.திரு.பிரபு மற்றும் 11.திரு.சுரேந்தர் ஆகியோர்களை விசாரிக்க அவர்கள் இருவரும் ஆவண எழுத்தர் திரு.ஜெயராமன் என்பவரிடம் உதவியாளராக இருந்து வருவதாகவும் தெரிவித்தார்கள். பிறகு அங்கிருந்த 12.திரு. பிரபாகரன் என்பவரை விசாரிக்க அவர் ஆவண எழுத்தர் சாதிக்பாஷா என்பவரிடம் உதவியாளராக இருப்பதாகவும், 13.திரு.சூர்யா என்பவரை விசாரிக்க அவர் ஆவண எழுத்தர் திருமலை என்பவரிடம் உதவியாளராக இருப்பதாகவும், பிறகு 14.திரு.வாசுதேவன் என்பவரை விசாரிக்க அவர் முத்திரைத்தாள் விற்பனையாளராக இருப்பதாகவும் கூறினார்கள். அதன் பிறகு மேற்படி நபர்களை அவர்வர்கள் இடத்தில் இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டது. அதன் பிறகு அலுவலகத்தையும், அங்கிருந்தவர்களை சோதனை செய்தபோது கீழ் கண்டவகையில் கணக்கில் வராத தொகை கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீராய்வின்போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத ரொக்கப் பணத்தின் விவரம் 1.அலுவலகத்தில் இருந்த திரு.திருமலை, ஆவண எழுத்தர் அவர்களை சோதனை செய்ததில் அவரிடமிருந்து ரூ.61,500/- (2000x1 = 2000, 500 x 119 = 59500) (ரூபாய் அறுபத்தோராயிரத்து ஐநூறு) கைப்பற்றப்பட்டது. மேற்படி தொகையை குறித்து கேட்க அவர் மேற்படி தொகைக்கான சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டுள்ளது. 2.அலுவலகத்தில் இருந்த திரு.தயாளன், ஆவண எழுத்தர் அவர்களை சோதனை செய்ததில் அவரிடமிருந்து ரூ.16,500/- (2000x8 = 16000, 100 x 4 = 400, 50 x 2 = 100) (ரூபாய் பதினாறாயிரத்து ஐநூறு) கைப்பற்றப்பட்டது. மேற்படி தொகையை குறித்து கேட்க அவர் மேற்படி தொகைக்கான சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டுள்ளது. 3.அலுவலகத்தில் இருந்த திரு.செந்தில்குமார், ஆவண எழுத்தர் சண்முகப்பிள்ளை உதவியாளர் என்பவரை சோதனை செய்ததில் அவரிடமிருந்து ரூ.19,000/- (2000x1 = 2000, 500 x 32 = 16000, 200 x 4 = 800, 100 x 1 = 100, 50 x 2 = 100 ) (ரூபாய் பத்தொன்பதாயிரம்) கைப்பற்றப்பட்டது. மேற்படி தொகையை குறித்து கேட்க அவர் மேற்படி தொகைக்கான சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டுள்ளது. 4.அலுவலகத்தில் இருந்த திரு.சூர்யா, ஆவண எழுத்தர் திருமலை என்பவரின் உதவியாளர் அவர்களை சோதனை செய்ததில் அவரிடமிருந்து ரூ.3,300/- (500 x 5 = 2500, 200 x 1 = 100, 100 x 5 = 500, 50 x 2 = 100 ) (ரூபாய் மூன்றாயிரத்து முந்நூறு) கைப்பற்றப்பட்டது. மேற்படி தொகையை குறித்து கேட்க அவர் மேற்படி தொகைக்கான சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் மேற்படி தொகை

FS. [signature] 16/8/14

விசாரணைக்காக கைப்பற்றப்பட்டுள்ளது. 5.அலுவலகத்தில் இருந்த திரு.மணிராஜ், ஆவண எழுத்தர் தயாளன் என்பவரின் உதவியாளர் அவர்களை சோதனை செய்ததில் அவரிடமிருந்து ரூ.5,100/- (2000X1 = 2000, 500 x 5 = 2500, 100 x 6 = 600) (ரூபாய் ஐந்தாயிரத்து நூறு) கைப்பற்றப்பட்டது. மேற்படி தொகையை குறித்து கேட்க அவர் மேற்படி தொகைக்கான சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டுள்ளது. 6.அலுவலகத்தில் இருந்த திரு.சுரேந்தர், ஆவண எழுத்தர் ஜெயராமன் என்பவரின் உதவியாளர் அவர்களை சோதனை செய்ததில் அவரிடமிருந்து ரூ.7,900/- (2000X1 = 2000, 500 x 10 = 5000, 200 x 1 = 200, 100 x 7 = 700 ) (ரூபாய் ஏழாயித்து தொள்ளாயிரம்) கைப்பற்றப்பட்டது. மேற்படி தொகையை குறித்து கேட்க அவர் மேற்படி தொகைக்கான சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டுள்ளது. 7.அலுவலகத்தில் இருந்த திரு.பிரபு, ஆவண எழுத்தர் ஜெயராமன் என்பவரின் உதவியாளர் அவர்களை சோதனை செய்ததில் அவரிடமிருந்து ரூ.2,100/- (500 x 3 = 1500, 100 x 5 = 500, 50 x 2 = 100) (ரூபாய் இரண்டாயிரத்து நூறு) கைப்பற்றப்பட்டது. மேற்படி தொகையை குறித்து கேட்க அவர் மேற்படி தொகைக்கான சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டுள்ளது. 8.அலுவலகத்தில் இருந்த திரு.பிரபாகரன், ஆவண எழுத்தர் சாதிக்பாஷா என்பவரின் உதவியாளர் அவர்களை சோதனை செய்ததில் அவரிடமிருந்து ரூ.1,700/- (500 x 3 = 1500, 200 x 1 = 200) (ரூபாய் ஆயிரத்து ஏழுநூறு) கைப்பற்றப்பட்டது. மேற்படி தொகையை குறித்து கேட்க அவர் மேற்படி தொகைக்கான சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டுள்ளது. 9.அலுவலகத்தில் இருந்த திரு.வாசுதேவன், முத்திரைத்தாள் விற்பனையாளர் அவர்களை சோதனை செய்ததில் அவரிடமிருந்து ரூ.8,500/- (500 x 2 = 1000, 200 x 25 = 5000, 100 x 25 = 2500 ) (ரூபாய் எட்டாயிரத்து ஐநூறு) கைப்பற்றப்பட்டது. மேற்படி தொகையை குறித்து கேட்க அவர் மேற்படி தொகைக்கான சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டுள்ளது. 10.அலுவலகத்தில் இருந்த திருமதி.சாமுண்டீஸ்வரி, டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டர் என்பவரை WHC 386 K.சூடாமணி என்பவர் மூலம் சோதனை செய்ததில் அவரிடமிருந்து ரூ.1,500/- (500 x 3 = 1500) (ரூபாய் ஆயிரத்து ஐநூறு) கைப்பற்றப்பட்டது. மேற்படி தொகையை குறித்து கேட்க அவர் மேற்படி தொகைக்கான சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டுள்ளது. திடீராய்வின்போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத மொத்த தொகை பதிவுக்கு வரும் பொதுமக்களிடம் இருந்து லஞ்சமாக பெற்றிருக்க கூடும் என விசாரணையில் தெரிய வந்ததால் மேற்படி தொகை ரூ.1,27,100/- (ரூபாய் ஒரு லட்சத்து இருபத்தேழாயிரத்து நூறு மட்டும்) விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்பு அலுவலத்தில் இருந்த பதிவேடுகளான A கணக்குப் பதிவேடு, Sec 41- கணக்குப் பதிவேடு, D கணக்குப் பதிவேடு மற்றும் G, H கணக்குப் ஆகிய பதிவேடுகளை சரிபார்க்க பதிவேட்டினை பார்வையிட்ட போது பதிவேடுகளில் குறிப்பிட்டுள்ள தொகைகள் அனைத்தும் ஆன்லைன் மூலம் பெறப்பட்டுள்ளது. ரொக்கமாக எந்த தொகையும் இவ்வலுவலகத்தில் பெறப்படவில்லை. மேலும் விசாரணைக்காக தனி நபர் பண இருப்பு பதிவேடு மற்றும் வருகைப்பதிவேடு ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பிறகு அலுவலகத்தில் இருந்த சார்பதிவாளர், அலுவலக பணியாளர்கள் மற்றும் அலுவலகத்தினுள் இருந்தவர்கள் மொத்தம் பதினான்கு நபர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இந்த திடீராய்வு மகசர் இன்று 15.07.2019ந்தேதி இரவு 19.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 23.00 மணிக்கு முடிக்கப்பட்டது. எனவே மேற்படி செஞ்சி சார்பதிவாளர் அலுவலகத்தில் நடத்திய திடீராய்வின்போது கைப்பற்றப்பட்ட தொகையானது பதிவுக்கு வரும் பொதுமக்களிடம் இருந்து லஞ்சமாக பெற்றிருக்க கூடும் என விசாரணையில் தெரிய வருவதால் இதற்கு பொறுப்பான உதவியாளர் சார்பதிவாளர் (பொறுப்பு) திரு. K.C. சடகோபன் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள, ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கடலூர். இணைப்பு: 1.திடீர் ஆய்வு மகஜரின் உண்மை நகல் 2.ரொக்கம் ரூபாய் 1,27,100/-, தனி நபர் பண இருப்பு பதிவேடு மற்றும் வருகைப்பதிவேடு ரொக்கப்பதிவேடு 3. திரு. K.C. சடகோபன் மற்றும் 13 நபர்களின் அசல் வாக்குமூலம்.

அய்யா, நான் இன்று 16.07.2019 காலை 11.00 மணிக்கு மேலே கண்ட புகார் மனுவை பெற்று விழுப்புரம் ஊ.த.க பிரிவு குற்ற எண்.12/2019/AC/VPM u/s 7 of P.C. Act 1988 as Amended by Prevention of Corruption (Amendment) Act 2018 ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கையின் அசல் நகல், வாதியின் புகார் மனு மற்றும் திரு. K.C. சடகோபன் மற்றும் 13 நபர்களின் அசல் வாக்குமூலம் ஆகியவற்றை இணைத்து கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், விழுப்புரம் அவர்களுக்கும் இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் பணிந்து அனுப்பப்படுகிறது.

ந. தேவநாதன் 16/7/19

(ந.தேவநாதன்)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
விழுப்புரம்.